

சேகர்



பாஸ்கர்



காளிமுத்து



ராம்ஜி



சோமசுந்தரம்



ரகுராமன்



மைதிலி கிருஷ்ணமூர்த்தி



ராஜேஸ்



பாலசுப்ரமணியன்

# புனே சிட்டி தமிழ்ச் சங்கம்

அரசியல் சார்பற்ற, தமிழார்வம், மனிதநேயம் மற்றும் சமுதாய விழிப்புணர்வு கொண்ட பெரியவர்களின் முயற்சியால் கடந்த 2002ம் ஆண்டு தொடங்கப்பட்டது புனே சிட்டி தமிழ்ச் சங்கம் (பி.ஸி. டி.எஸ்.).

சங்கத்தின் தலைவராக எஸ்.சேகர், உபதலைவராக கே.ஆர்.ராஜேஷ், செயலாளராக கே.பாலசுப்பிரமணியன், பொருளாளராக பு.பாஸ்கர், செயற்குழு உறுப்பினர்களாக எஸ். காளிமுத்து, ஆர். சோமசுந்தரம், ஆர்.ரகுராமன், ராம்ஜி, மைதிலி கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் பொறுப்பு வகிக்கின்றனர். சங்கத்தின் செயல்பாடுகள் மற்றும் நோக்கங்கள் குறித்து தலைவர் சேகர் கூறியதாவது;

புனேயில் வசிக்கும் தென்னிந்திய சமூகத்தின் கலாசார மற்றும் சமுதாய மேம்பாடுகளை கருத்தில் கொண்டு நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறோம். படிப்பில் ஆர்வமிக்க வசதி குறைவான குழந்தைகளுக்கு நிதி உதவி செய்வது, மாற்றுத்திறனாளிகள் எதிர்கொள்ளும் அவலங்களை களைந்து அவர்களின் முன்னேற்றத்திற்கும் மறுவாழ்வுக்கும் ஆவன செய்வது, விபத்து, திடீர் மரணம் போன்ற துக்க நிகழ்வுகளால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கும் நோயால் பாதிக்கப்பட்ட நலிந்தோரின் மருத்துவ சிகிச்சைக்கும் உதவி செய்வது போன்ற காரியங்களை செய்து வருகிறோம்.

விரைவில் சிறந்த தமிழ் நூல்களுக்காக நூலகம் ஒன்றை திறக்கவும் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறோம்.

இந்த பணிகளை திறம்பட மேற்கொள்ள சங்க உறுப்பினர்களின் பங்களிப்பு மிக முக்கியமானது என்பதால் ஒவ்வொரு உறுப்பினரின் ஒத்துழைப்பையும் சங்கம் எதிர்பார்க்கிறது. உறுப்பினர்களும் தங்களது நேரத்தையும் ஒதுக்கி நிதியுதவியும் செய்து வருகின்றனர்.

புனேயில் உள்ள பல பள்ளிகளில் படித்து வரும் ஏழை குழந்தைகளை சங்க நிர்வாகம் அடையாளம் கண்டு அவர்களின் கல்வி செலவுக்காக கடந்த 10 ஆண்டுகளாக சங்கம் நிதியுதவி செய்து வருகிறது.

பன்வெலில் உள்ள ஜன் கல்யாண் சமூக நலை அமைப்பு 100 முதியோரையும் 200 சிறார்களையும் பராமரித்து வருகிறது. அந்த அமைப்புக்கு தமிழ்ச் சங்கம் தன்னால் முடிந்த வரை தொடர்ந்து பலவழிகளில் உதவி வருகிறது. மொழியும் கலாசாரமும் ஒன்றோடு ஒன்று பின்னிப்பிணைந்தவை என்பதால் தமிழ் கலாசாரம் புனே மண்ணில் தழைக்கும் வகையில் சங்கம் ஆண்டுதோறும் குறைந்தது 4 கலை நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது. தமிழ்க் கலத்துறையில் முத்திரைப்பதித்த பல கலைஞர்களை இங்கு அழைத்து வந்து நிகழ்ச்சிகளை நடத்தியிருக்கிறோம்.




மகாகவி பாரதிக்கு சங்கத்தின் சார்பில் ஆண்டு தோறும் டிசம்பர் 25ம் தேதியன்று விழா எடுக்கிறோம். சங்கத்தின் ஆண்டு விழாவிலும் திரளான தமிழ் திருநாளான பொங்கல் விழாவிலும் தமிழர்கள் திரளாக கலந்து கொள்கிறார்கள். சங்கத்துடன் இணைந்து செயல்படவும், சங்கத்தின் நல்ல முயற்சிகளுக்கு சக்திக்கேற்றவாறு உதவிக்கரம் நீட்டிடவும் புனேவாழ் தமிழர்களை நாங்கள் வரவேற்கிறோம்.

தமிழ்ச் சங்கத்தில் சேர்ந்து பணியாற்ற விரும்புகிறவர்களும் உதவி தேவைப்படுவோரும் 9823310830, 9822191305 ஆகிய எண்களில் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அவர் கூறினார்.